<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 475/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 03.06.2025.**

| | |
|---|---|
| **Name : கல்யாணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து வருகிறேன். போது எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். கடந்த 21.02.2021ம் தேதி மாலை 5.00 மணி சுமாருக்கு பெரியாண்டிச்சி அம்மன் கோவில் பண்டிகை காலம் என்பதால் சுத்தம் செய்தபோது கோவிந்தராஜ் என்பவர் JCB வாகனத்தை கொண்டு வந்து சுத்தம் செய்தார்கள். எனது கணவர் இதுப்பற்றி கேட்டப்போது தகராறு ஏற்பட்டது. எதிரி எனது கணவரை பார்த்து தேவிடியா பையா என்று சொல்லி கெட்ட வார்த்தையால் பேசினார். நிலம் சம்மந்தமாக மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாக சொன்னோம்.

2. பிறகு எதிரி எனது கணவரை கருங்கல்லை எடுத்து தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். பிறகு கட்டையால் வலது தோள்பட்டையில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். பிறகு சம்பவ சமயத்தில் நான் மற்றும் தங்கமணி, நேசமணி ஆகியோர் இருந்தார்கள். காயம்பட்ட எனது கணவரை மேட்டுா அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார்என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

3. எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலம் பிரச்சனை சம்மந்தமாக என்ன பிரச்சனை என்றால் எனது சின்ன மாமனார் எதிரி எங்களுக்கு தெரியாமல் எங்கள் பாகத்தையும் சேர்த்து கிரயம் செய்து கொண்டார். எவ்வளவு நாட்களுக்கு முன்னால் எனது சின்னமாமனார் விலைக்கு வாங்கினார் என்றால் 2014ல் வாங்கினார். சின்ன மாமனார் விற்பனை செய்த இடத்தில் எங்களது இடம் சேர்ந்துள்ளது என்று நாங்கள் வழக்கு போட்டோம். நான் எந்த நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது மச்சாண்டார் தான் வழக்கு தாக்கல் செய்தார்.

4. எனது மச்சாண்டர் போட்ட வழக்கு எதிரிக்கு சாதமாக தீர்ப்பான என்றால் ஆமாம். எதிரிக்குதான் அந்த இடம் பாத்தியமானது என்று தீர்ப்பானது என்றால் ஆமாம். மேற்படி தீர்ப்பை எதிர்த்து நாங்கள் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த நிலப்பிரச்சனை சம்மந்தமாகதான் எங்களுக்கும், எதிரிக்கும் பிரச்சனை நடந்து என்றால் ஆமாம்.

5. பெரியாண்டிச்சி அம்மன் கோவில் எங்கள் வீட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 100 மீட்டர் தூரத்தில் இருக்கும். பெரியாண்டிச்சி அம்மன் கோயில் எங்களுக்கும் சொந்தம் என்றால் ஆமாம். பெரியாண்டிச்சி அம்மன் கோவிலை எதற்காக சுத்தம் செய்து கொண்டிருந்தார் என்றால் தெவம் காரணமாக சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

6. எங்களுடைய இருவருக்கும் பாத்தியமான இடம் என்பதால் அந்த கோவில் பண்டிகை சமயத்தில் சுத்தம் செய்வதில் எனக்கு என்ன ஆட்சேபனை என்றால் கோவிலை சுத்தம் செய்யவில்லை ஆனால் கோவிலுக்கு மேல் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். கோவிலை சுத்தம் செய்யும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 5.30 மணி இருக்கும். சம்பவ சமயத்தில் என்னையும், எனது கணவரையும் தவிர வேறு யாரும் இல்லை என்றால் ஆமாம்.

7. தங்கமணி, நேசமணி சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் 10 நிமிடம் கழித்து தான் வந்தார்கள். மேற்படி நபர்கள் சம்பவயிடம் வரும் போது சம்பவம் முடிந்து விட்டது என்றால் இல்லை நடந்து கொண்டிருந்தது.

சாட்சி மீண்டும் சம்பவம் முடிந்து பிறகுதான் மேற்சொன்ன நபர்கள் வந்தார்கள் என்றால் ஆமாம். 27.02.2021ம் தேதி நான், எனது கணவர், மச்சாண்டர், அவருடைய மனைவி ஆகியோர் ஆஜர் எதிரியை அடித்து கையை உடைத்து விட்டதாக இந்த நீதிமன்றத்தில் என் மீதும், எனது கணவர், மச்சாண்டார், நேசமணி, தங்மணி, மகேந்திரன் ஆகியோர் மீது வழக்கு உள்ளது என்றால் ஆமாம். அந்த வழக்கு சி.சி.62/2021 என்ற எண்ணில் உள்ளது என்றால் ஆமாம்.

8. நான் எதிரியை அடித்ததாக சொல்லி குற்ற எண்.125/2021 இதச 147, 294(பி), 323, 324, 504(2), 326 பிரிவின் கீழ் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10, 15 பேர் இருந்தார்கள். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் 1/2 நேரம் நடந்திருக்கும். எனது கணவரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் நேசமணி, மகேந்திரன் ஆகியோர் அழைத்து சென்றனர்.

9. சம்பவம் குறித்து யார் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியை அடித்து அவரது வலது கையில் எலும்பு முறிவு ஏற்படுத்திவிட்டு எதிரிதான் எங்களை அடித்தார் என்று சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் எதிரியை அடித்துவிட்டு, எதிரி மீது தவறாக புகார் அளித்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 475/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 03.06.2025.**

| | |
|---|---|
| **Name : தங்கமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து வருகிறேன். போது எனது கணவரின் தம்பி ஆவார். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். கடந்த 21.02.2021ம் தேதி மாலை 5.00 மணி சுமாருக்கு எதிரி காட்டில் இருந்தபோது எங்களுடைய நிலத்தில் எதிரி கோவிந்தராஜ் என்பவர் JCB வாகனத்தை கொண்டு வந்து சுத்தம் செய்தார். எனது போது இதுப்பற்றி கேட்டப்போது எதிரி எனது கணவரின் தம்பியை கல்லை எடுத்து தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். பிறகு நான் தூரத்தில் இருந்து சம்பவத்தை பார்த்துவிட்டு சம்பவயிடத்திற்கு வந்தேன். பிறகு எனது மகன் நேசமணியை வரச்சொல்லி அவர் வந்து காயம்பட்ட எனது கணவரின் தம்பியை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார்என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்துள்ளது என்றால் ஆமாம். இந்த நிலம் சம்மந்தமாக நீதிமனறத்தில் வழக்கு உள்ளது தெரியுமா என்றால் தெரியும். எனது சின்ன மாமனார் வாங்கிய நிலம்

அவருக்குதான் சொந்தம் என்று தீர்ப்பானது தெரியுமா என்றால் தெரியும். பண்டிகை சமயத்தில் சத்தம் அதிகமாக இருந்ததால் என்ன பேசினார் என்று எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்தில் வரும் போது சம்பவம் முடிந்துவிட்டதா என்றால் சம்பவம் நடந்து கொண்டிருந்தது. நான் 100 மீட்டர் தொலைவில் இருந்துதான் கல்லை எடுத்து எறிந்ததை பார்த்தேன். எனது மகன் சம்பவ சமயத்தில் எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் எனது மகன் வேறு கோவிலுக்கு கும்பாபிசேஷகத்திற்கு சென்றுவிட்டதால் நான் போன் மூலமாக வரச்சொல்லி மருத்துவமனைக்கு எனது கொளுந்தனாரை அழைத்து சென்றார்.

4. சம்பவ சமயத்தில் நான், போது, மகேந்திரன், ஆகியோர் கோவிந்தராஜை அடித்ததாக சொல்லி இந்த நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் ஆமாம். அந்த வழக்கிற்காக நாங்கள் நீதிமன்றத்திற்கு வருகிறோம் என்றால் ஆமாம். சம்பவ சமயத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 15, 20 பேர் இருந்தார்கள். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியை அடித்து எதிரிக்கு கை எலும்பு முறிவு ஏற்படுத்திவிட்டு எங்களை அடித்ததாக சொல்வது நம்பதன்மையற்றது என்றால் சரியல்ல.

5. நாங்கள் தான் எதிரியை அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிக்கவேண்டி அவர்கள் மீது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.